| அசல் வழக்கு எண்.108/2021 | | வா.சா.1 | தேதி.13.12.2022 | |
|---|---|---|---|---|
| பெயர் | திரு.ரவிச்சந்திரன் | | வயது | |
| த/பெ. | திரு.கனகராஜ் | | முகவரி | |
| வட்டம் | மேட்டுப்பாளையம் | | மாவட்டம் | கோயமுத்தூர் |
| கிராமம் | | | தொழில் | |

சாட்சி முன்னிலை உறுதிமொழி எடுக்கப்பட்டது

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எங்கள் வீட்டிற்கு வழிப்பாதை கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும். வழக்குச் சொத்து என் அப்பாவிற்கு பாத்தியப்பட்டது. என் அப்பாவிற்கு 3 பிள்ளைகள். நான் 2 ம் வாதி. முதல் வாதி என் அண்ணன். என் அப்பாவிற்கு மகள் ஒருவர் உள்ளார். எனது வழக்குச் சொத்து என் அம்மாவிற்கு பாத்தியப்பட்டதாக வா சா ஆ 1 ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் அப்பா என் அம்மா பெயரில் வாங்கி கிரையம் செய்துள்ளார். வா சா ஆ 1 ஆவணத்தின்படி சொத்தின் மொத்த பரப்பளவு 3 செண்ட் என்றால் சரிதான். அப்படி என்றால் அந்த 3 செண்ட் இடத்தை பொறுத்துதான் நான் பரிகாரம் கேட்க முடியும் என்றால் சரிதான்.

2. வழக்கு சொத்து விபரத்தில் எங்களது நிலம் அல்லாது புறம்போக்கு இடத்தில் 350 சதுரடியில் அறை கட்டி உள்ளதாக உரைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட 350 சதுரடிக்கு நானோ எனது தாயாரோ எனது குடும்பத்தாரோ உரிமையாளர் கிடையாது என்றால் சரிதான். சட்டப்படி எனக்கு உரிமை இல்லாத இடத்தை பொறுத்து நான் உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்க இயலாது என்றும் ஆகவே எனது வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல. வழக்குச் சொத்துக்கு அருகில் நீர்வழி புறம்போக்கு இருந்தது என்பதை காண்பிக்க எவ்வித ஆவணங்களையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் வரைபடம் கொடுத்துள்ளேன். வேறு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. நீர்வழி புறம்போக்கு உள்ளதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றும் அதனால்தான் எவ்வித ஆவணங்களையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

3. எனது தாயார் லட்சுமி நாங்கள் இந்த அசல் வழக்கில் கோரியுள்ள அதே பரிகாரத்தை கேட்டு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு 323/2004 என்ற

வழக்கை தாக்கல் செய்து அந்த வழக்கு எனது தாயாரின் தவறுகையால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அந்த வழக்கின் தீர்ப்பானது இவ்வழக்கை முன் தீர்ப்பு தடை கோட்பாட்டால் தடை செய்கிறது என்றால் சரியல்ல. நில ஆக்கிரமிப்பு சட்டம் பிரிவு 5-ன்படி ஆக்கிரமிப்பு இடத்தை அகற்ற வேண்டி எனது தாயாருக்கும் 1ம் வாதிக்கும் 15.10.2021 அன்று அறிவிப்பு அனுப்பபட்டது என்றால் சரிதான். அந்த அறிவிப்பிற்கு எனது அண்ணன் பதில் அனுப்பினாரா என்றால் அது எனக்கு தெரியாது.

4. மேற்கண்ட அறிவிப்புகள் வழக்குச் சொத்து குறித்த அறிவிப்புகள் என்றால் அது எனக்கு தெரியாது. இவ்வழக்கில் எனது அண்ணன் விஜயகுமாருக்காகவும் நான் சாட்சியம் அளிக்கிறேன். நில ஆக்கிரமிப்பு சட்டப்படியான பிரிவு 7-ன்படி 1ம்வாதியாகிய என் அண்ணனுக்கு அறிவிப்பு அனுப்பபட்டுள்ளதால் உரிமையியல் நீதிமனற்த்தில் அது குறித்து கேள்வி எழுப்ப இயலாதென்றும் பரிகாரம் கேட்கவேண்டுமென்றால் உயர்நீதிமன்றத்தில்தான் பரிகாரம் கேட்க முடியும் என்றும் அதனால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா சா ஆ 13 முதல் 19 வரையிலான ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்ட ஆவணங்கள் என்பதால் அந்த ஆவணங்கள் அனைத்தும் நிராகரிக்கத்தக்கவை என்றால் சரியல்ல. என் தாயாரின் இறப்பிற்கு நான் சொல்லி உள்ள அனைத்து காரணங்களும் வழக்கிற்காகவேண்டி பொய்யாக உரைக்கப்பட்டவை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த ஆவணங்களுக்கும் நான் கேட்டுள்ள பரிகாரத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லாததால் அவை அனைத்தும் நிராகரிக்கத்தவை என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

| | | |
|---|---|---|
| நீதிமன்ற கேள்வி | - | புறம்போக்கு நிலத்தில் 350 சதுரடி ஆக்கிரமிப்பு செய்து அறை கட்டி உள்ளதாக உங்கள் வழக்கில் சொல்லப்பட்டுள்ளது சரியா? |
| பதில் | - | சரிதான். |
| கேள்வி | - | அவ்வாறு புறம்போக்கு நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டுவது சரியா? |
| பதில் | - | அது என் அப்பா கட்டியது தவறுதான். |
| கேள்வி | - | புறம்போக்கு நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்து கட்டியிருந்தால் அதை சட்டப்படி அகற்றி தரவேண்டுமா? இல்லையா? |
| பதில் | - | சட்டப்படி அகற்றித்தரவேண்டும். |
| கேள்வி | - | உங்களது வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள குடிநீர் இணைப்பு எந்த இடத்தில் உள்ளது? |

பதில் - புறம்போக்கு இடத்தில் உள்ளது.

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

எனது அம்மா பெயரில் உள்ள வழக்குச் சொத்து வீடு மேற்குப்பார்த்த வீடு என்றால் சரிதான். அந்த மேற்குப்புறம் வழியாகத்தான் எனது குடிநீர் இணைப்பு வருகிறது என்றால் சரிதான். நான் புறம்போக்கு இடமென சொல்லக்கூடிய இடம் எனது அம்மா வாங்கிய சொத்துக்கு கிழக்கு புறம் உள்ளது என்றால் சரிதான். புறம்போக்கு இடத்தில் குடிநீர் இணைப்பு இல்லை என்றும் குடிநீர் இணைப்பு எனது வீட்டிற்கு முன்புறம்தான் உள்ளது என்றால் வீட்டிற்கு முன்புறம் வந்து மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி பாதையில் செல்கிறது. நான் சொல்வது போல் பாதையே இல்லை என்றும் பாதையின் வழியாக வருவதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

<u>நீதிமன்ற அனுமதியுடன் மறு விசாரணை</u>

நான் புறம்போக்கு நிலத்தில் கட்டியுள்ள இடத்திற்கு பட்டா வேண்டி மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்துள்ளேன். அந்த புறம்போக்கு நிலத்தில் வேறு யார் ஆக்கிரமிப்பு செய்து கட்டி உள்ளார்கள் என்றால் அரசு மேல்நிலைப்பள்ளிக்கான கழிவறையும் கழிவறைத்தொட்டியும் கட்டி உள்ளார்கள். வேறு யாரும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை.

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

பள்ளியின் கழிவறை மற்றும் கழிவறை தொட்டி கட்டப்பட்டுள்ள இடம் புறம்போக்கு நிலமே அல்லவென்றும் அது அரசு பள்ளிக்கு சொந்தமான இடம் என்றால் சரியல்ல. அது புறம்போக்கு நிலம் ஆகும்.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

P K SIVAKUMAR

Digitally signed by P K SIVAKUMAR
Date: 2022.12.14 10:35:18 +0530

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.